**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.**

Case No. S.C. No. 133/2022
Prosecution side witness for P.W.11

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. குருராமச்சந்திரன்** | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **27.04.2026**

A3 present. Others absent. U/s. 317 Cr.P.C. petition filed and allowed. A6 died.

**முதல் விசாரணை:-**

நான் கடந்த 20 வருடங்களாக தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி காந்தி நகர் ஜீவா தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். என் மீது கொப்பம்பட்டி காவல்நிலையத்தில் ஒரு கொலை வழக்கும், கோவில்பட்டி கிழக்கு காவல்நிலையத்தில் ஒரு அடிதடி வழக்கும் உள்ளது. 1ம் எதிரி சூர்யா தினேஷை எனக்கு தெரியாது. அவர் எனக்கு பழக்கமானவர் இல்லை. இந்த வழக்கு சம்மந்தமாக நான் யாருக்கும் எதுவும் கொடுக்கவில்லை. குறிப்பாக 1ம் எதிரிக்கு நான் எனது ஹெல்மெட்டை கொடுக்கவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக எதுவும் எனக்கு தெரியாது, நான் எதையும் கேள்விப்படவும் இல்லை. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் விசாரித்தார்கள். நீதிமன்றத்திற்கு அழைத்துசென்றார்கள். அங்கு இதற்கு முன்பாக கோவில்பட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சாட்சியமளித்துள்ளேன். அவ்வாறு நான் கோவில்பட்டி நீதித்துறை நடுவர்

நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குமூலம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ–11** ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் விசாரித்தார்கள். அவ்வாறு விசாரிக்கும்போது மேற்கண்ட விவரத்தைத்தான் சொல்லியுள்ளேன்.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்திற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரணையின்போது, 1ம் எதிரி சூர்யா தினேஷை நான் ஜெயிலில் இருக்கும்போது எனக்கு நன்கு பழக்கம் என்றும், அந்த பழக்கத்தின் அடிப்படையில் அவர் என்னிடம் வாட்ஸ்அப் ஹாலில் பேசுவார் என்றும், அவ்வாறு பேசும்போது தனது தாய்மாமா ஆஜர் எதிரி உய்க்காட்டான் மகன் அய்யாபிள்ளையை கடந்த 2010ஆம் வருடம் ஒரு இடப்பிரச்சனை சம்மந்தமாக வடகரை ஊரை சேர்ந்த வெண்கலப்பாண்டி மற்றும் மணி குடும்பத்தினர் கொலை செய்திருப்பதாகவும், அவனை கொலை செய்து பழிதீர்க்க வேண்டும், அதற்கு தேவைப்பட்டால் நீ ஏதாவது ஒரு வகையில் உதவ வேண்டும் என கேட்டுக்கொண்டார் என்றும், ஆனால் அதை நான் சீரியஸாக எடுக்கவில்லை என்றும், இந்நிலையில் கடந்த 25.03.2022ஆம் தேதி மணி சுமார் 3.00மணியளவில் 1ம் எதிரி சூர்யா தினேஷ் எனக்கு வாட்ஸ் அப் ஹாலில் போன் செய்து சூர்யா தினேஷ்–ம் அவரது நண்பர் சுபாஷ் என்பவரும் பைக்கில் கோவில்பட்டிக்கு வந்து கொண்டிருப்பதாகவும், அவரிடம் ஹெல்மெட் இல்லை என்றும், அதனால் போலீஸ் வாகன சோதனையில் பிடிப்பார்கள் என்றும், உன்னிடம் ஹெல்மெட் இருந்தால் கொடு என்று கேட்டார் என்றும், உடனே சூர்யா தினேஷிடம் தருகிறேன், கோவில்பட்டி மெயின்ரோட்டிற்கு வா என்றும், பின்னர் ரேவா பிளாசா லாட்ஜ் பக்கம் நின்று கொண்டிருக்கும் மேற்படி இருவரும் TN76 H 3057 என்ற எண் கொண்ட பேசன் புரோ சிவப்பு கலர்

பைக்கில் வந்தார் என்றும், நான் அவரிடம் ஹெல்மெட்டை கொடுக்கும்போது எதற்கு எங்கே போகிறீர்கள் என்று கேட்கும்போது அதற்கு சூர்யா தினேஷ் என்னிடம் வீரவாஞ்சிநகரில் உள்ள ஒருநபரை பார்த்துவிட்டு ஸ்ரீவில்லிபுத்தூர் வரை போக வேண்டும் என்றும், போய்விட்டு வரும்போது ஹெல்மெட்டை என்னிடம் தந்துவிடுவதாக என்னிடம் கூறினார் என்றும், சுபாஷ் என் ஹெல்மெட்டை போட்டுக்கொண்டு பைக்கை ஓட்டிக்கொண்டும், சூர்யா தினேஷ் பைக்கில் பின்னால் உட்கார்ந்து கொண்டு இனாம் மணியாச்சியை பார்த்து போனார்கள் என்றும், அவர்கள் சொன்னதுபோல் வீரவாஞ்சிநகர் 9 வது தெருவில் உள்ள மணியை வெட்டி கொலை செய்துவிட்டார்கள் என்று பின்னர் கேள்விப்பட்டேன் என்றும், மேற்படி விவரத்தை போலீசிடம் சொன்னால் எனது உயிருக்கு ஆபத்து வந்துவிடும் என மறைத்துவிட்டேன் என்றும், பின்னர் கோவில்பட்டி மேற்கு காவல்நிலைய போலீசார் என்னை விசாரிக்கும்போது அவரின் செல்போனில் வைத்திருந்த இருவர் பைக்கில் சென்ற வீடியோ பதிவில் உள்ள போட்டோவை காட்டி இவர்கள் தெரியுமா என்று கேட்டபோது நான் அதை பார்த்துவிட்டு பைக்கில் பின்னால் உட்கார்ந்திருப்பவர் சூர்யா தினேஷ் என்றும், ஹெல்மெட்டை போட்டு பைக்கை ஓட்டி சென்றவர் சுபாஷ் என்றும், அந்த ஹெல்மெட் என்னுடையதுதான் என்றும் அடையாளம் காட்டினேன் என்றும், இது சம்மந்தமாக கோவில்பட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுத்தேன் என்றும், அது சம்மந்தமாக போலீசார் விசாரிக்கும்போது சொல்லிவிட்டு 1ம் எதிரி சூர்யாதினேஷ் எனது நண்பர் என்பதால் அவரை காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

குறுக்குவிசாரணை (எதிரிகள்தரப்பில்)

கோவில்பட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க போலீசார் சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில்தான் வாக்குமூலம் கொடுத்தேன் என்றுசொன்னால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.